# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.

## PROSECUTION OF WITNESS

## C.C.No.254/2026

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **28.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused present.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW–3 : திரு.சசிக்குமார் த/பெ வணங்காமுடி**

**முதல் விசாரணை**

நான் நலப்புரத்தில் குடியிருந்து தானிய மண்டியில் மேலாளராக பணி புரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை CCTV கேமிராவில் பார்த்துள்ளேன். அ.சா.1 எனக்கு தெரியும். கடந்த 1 வருடத்திற்கு முன்பு விடியற்காலை 02.45 மணிக்கு என்னுடைய கட்டிடத்தின் உரிமையாளர் சின்னசாமி எனக்கு போன் மூலம் என்னுடைய தானிய மண்டியின் கடையை உடைத்ததாக தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு விடியற்காலை 03.00 மணிக்கு வந்து பார்த்தபோது, கடையில் ரூ.1,32,000/– டிராவில் வைத்து பூட்டிவிட்டு சென்றேன். அந்த டிராவில் வைத்திருந்த ரூ.1,32,000/– பணத்தை திருடி சென்று உள்ளனர். பின்பு CCTV கேமிராவில் வைத்திருந்த DVRயும் திருடி சென்றுவிட்டார்கள். பின்பு எதிர் வீட்டில் வைத்திருந்த CCTV கேமிராவில் பார்த்தபோது முகமூடி அணிந்திருந்த 2 நபர்கள் எங்களுடைய கடையில் வைத்திருந்த பணத்தை திருடி சென்றது தெரிந்தது. இது சம்மந்தமாக இண்டூர் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்து 2, 3 மாதம் கழித்து காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் என்னுடைய கடையை உடைத்து ரூ.1,32,000/– பணத்தை திருடி சென்றதாக சொன்னார்கள். இந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.28 17:05:54 +0530

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.</u>**

**PROSECUTION OF WITNESS**

**C.C.No.254/2026**

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **28.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused present.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW−4 : திரு.மணி (எ) மணிகண்டன் த/பெ நாகராஜ்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் ரங்காபுரத்தில் குடியிருந்து ரவி தானிய மண்டியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை CCTV கேமிராவில் பார்த்துள்ளேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரை எனக்கு தெரியும். கடந்த 1 வருடத்திற்கு முன்பு விடியற்காலை 02.15 மணிக்கு அந்த கட்டிடத்தின் உரிமையாளர் சின்னசாமி அ.சா.1க்கு போன் மூலம் தானிய மண்டியின் கடையை உடைத்ததாக தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு விடியற்காலை 05.00 மணிக்கு வந்து பார்த்தபோது, CCTV கேமிராவில் வைத்திருந்த DVRயும் திருடி சென்றுவிட்டார்கள். பின்பு எதிர் வீட்டில் வைத்திருந்த CCTV கேமிராவில் பார்த்தபோது முகமூடி அணிந்திருந்த 3 நபர்கள் கடையில் வைத்திருந்த பணத்தை திருடி சென்றது தெரிந்தது. இது சம்மந்தமாக இண்டூர் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்து 10, 20 நாட்கள் கழித்து காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். காவல் நிலையத்திற்கு சென்று பார்த்தபோது CCTV கேமிராவில் உள்ள நபர்களும், எதிர் வீட்டில் பார்த்த CCTV கேமிராவில் உள்ள நபர்களும் ஒரே நபர்கள் தான் என தெரிய வந்தது. இந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.28 17:05:59 +0530

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.**

**PROSECUTION OF WITNESS**

**C.C.No.254/2026**

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **28.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused present.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW-5 : திரு.அங்கப்பன் த/பெ மாது**

**முதல் விசாரணை**

நான் பொடானூரில் குடியிருந்து, முதுகலை 2ம் ஆண்டு தருமபுரி கலை கல்லூரியில் பயின்று வருகிறேன். பார்வை மகஜரிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையது. கடந்த 6 மாதத்திற்கு முன்பு மாலை சுமார் 06.00 மணிக்கு தானியம் போடுவதற்காக ரவி மண்டிக்கு வந்தபோது திருடு போன சம்பவத்திற்காக இவ்வழக்கின் சம்பவ இடமான ரவி தானிய மண்டியில் காவல் துறையினர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் நானும், சக்தி என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.28 17:06:05 +0530